29th January 1972]

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. இது குறித்து முறையீடுகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Photos of candidates seeking admission into the colleges

* @ 8 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that some private colleges insist on photos of candidates seeking admission into their colleges; and

(*b*) if so, whether the same practice will be followed in Government Educational Institutions also?

தனியார் கல்லூரிகளில் சேர புகைப்படங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் கல்லூரிகளில் சேர இடம் வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்களிடம் அவர்களது புகைப்படங்களைச் சில கல்லூரிகள் கேட்கின்றன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இத்தகைய நடைமுறை அரசுக் கல்வி நிறுவனங்களிலும் பின்பற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) அரசுக் கல்லூரிகளில் இம்முறையைப் பின்பற்றுவதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, எந்தக் காரணத்துக்காக இந்தப் புகைப்படங்கள் தனியார் கல்லூரியில் கேட்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. எந்தக் கல்லூரியில் கேட்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. புகைப்படம் கேட்கக் கூடாது என்றும் இல்லை, கேட்கலாம் என்றும் இல்லை. எந்தக் கல்லூரியிலாவது கேட்கிறார்களா என்ற விவரக் குறிப்பு இல்லை. அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்த வரை, புகைப்படம் வேண்டும் என்ற உத்தரவு எதுவுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாணவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள் என்பதற்காகப் புகைப்படங்களைக் கேட்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி ஆள் மாறாட்டம் ஏதாவது நடந்திருக்கிறதா?

@ Postponed from the list of questions for 24th January 1972.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தேர்வைப் பொறுத்த வரை புகைப் படம் கேட்கிற முறை வந்தால், நல்லது தான். ஆள் மாறாட்டம் நடக்கிற கேஸ்கள் ஆங்காங்கு ஒன்றிரண்டு நடக்கின்றன. வேறு பல மாநிலங்களில் இது அதிகமாக நடக்கிறது. தேர்வுகளுக்கு அந்த முறை வந்தால், நிலைமையைச் செம்மைப்படுத்தப் பயன்படுவதாக இருக்கும். இப்போது அப்படிப் பட்ட ஆணைகள் எதுவும் பிறப்பிப்பதாக இல்லை.

Tamil Nadu Graduates Teachers' Association

* @ 9 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the **Minister for Education and Local Administration be pleased to state—**

(*a*) whether the Tamil Nadu Graduate Teachers' Association has represented to the Government during March-April, 1971 about refixation of their scales of pay;

(*b*) if so, whether the representation has been examined; and

(*c*) the action taken thereon ?

தமிழ்நாடு பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தனது ஆசிரியர்களின் சம்பள வீதங்களை மறுநிர்ணயம் செய்யுமாறு 1971-ஆம் ஆண்டு மார்ச்சு-ஏப்ரல் திங்களில் அரசுக்கு முறையீடு ஏதும் செய்ததா ?

(இ) ஆமெனில், அந்த முறையீடு பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இத்தகைய கோரிக்கை வந்துள்ளது. நிதி நிலைமையை மனதில் கொண்டு இது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்கும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தன் உரையிலே குறிப்பிட்டார்கள். பல கேடிகரிகளாகப் பிரித்துத்தான் இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இதே "கேடிகரி" அடிப்படையில் இன்னும் பலர் வருகிறார்கள். ஒரு கேடிகரியைப் பொறுத்த வரை, ஊதியத்தை உரிர்த்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லா கேடிகரிக்கும் உயர்த்த வேண்டுமென்ற சங்கடம் ஏற்படுகிறது.

@ Postponed from the List of Questions for 24th January 1972